**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

In the Court of District Munsif-cum-Judicial Magistrate Court, Vedaranyam.

**C. C. No. 265-2023**

| L.W.9 P.W.9 | | |
|---|---|---|
| Name: | வீராச்சாமி | Caste: |
| Father’s Name: | வைரன் | Calling: |
| Village: | | Religion: |
| Taluk: | | Age:70/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.06.2026
(எதிரிகள் ஆஜர்.)

**முன் விசாரணை:**

நான் தற்போது மூலக்கரையில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். சுமார் தேதி, மாதம் நினைவில்லை. 4 வருடங்களுக்கு முன்பு, ஒருநாள் இரவு 08.00 மணியளவில், போலிசார் வந்து, ஆடு திருடுபோனது சம்பந்தமாக விசாரித்தார்கள். திருடு போன ஆடு மற்றும் ஆடு திருடியவர்களையும் புகைப்படம் எடுத்தார்கள். அதற்கு சாட்சியாக நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். **என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையொப்பம் என்னுடையதாகும். அது அ.த.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**1 மற்றும் 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-**

என்னிடம் போலிசார் மூலக்கரை ஊராட்சி மன்றத்தில் வைத்து சாட்சி கையொப்பம் பெற்றார்கள் என்றால், சரி. அதில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப் பார்க்கவில்லை. ஊராட்சி மன்றத் தலைவருக்கு கட்டுப்பட்டு, அதில் சாட்சி கையொப்பம் செய்தேன். மற்றபடி எனக்கு எதுவும் தெரியாது.

**Typed down to my dictation, in my presence and hearing, and under my personal direction and superintendence and admitted by the witness to be correct.**

**(Sd/-……..G. Sudha., 01.06.2026)**
**Dm-cum-Jm, Vedaranyam.**